
தரம் 09

# தமிழ் மொழியும் இலக்கியமும்

அலகு 02

## உண்மைக்குப் பரிசு

தமிழ் மொழியும் இலக்கியமும்



உண்மைக்குப் பரிசு

Mr. A.L. Sabry B.A., P.G.D.E. (SLTS)
BT / BC / Al – Hira Maha Vidyalaya, Kattankudy.

# உண்மைக்குப் பரிசு

- இஸ்லாமிய பின்புலம் சார்ந்த ஒரு வரலாற்றுச் சம்பவத்தை விபரிப்பதாக இப்பாடம் அமைந்துள்ளது.
- இரண்டாம் கலீபாவாகிய உமர்(றழி) அவர்கள் நேர்மையான ஆட்சி செலுத்துபவராக இருந்தார்.
- ஒரு நாள் இரவு நகர்வலம் வருகையில் ஒரு வீட்டினுள் தாயும் மகளும் உரையாடுவது கேட்டது.
- அதன்போது பாலில் தண்ணீர் கலந்து விற்போம் என்று தாய் கூறுவதையும் அதனை மறுத்து மகள், பாலில் தண்ணீர் கலந்து விற்பது குற்றம் என்றும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்றும் கூறுவதையும் கலீபா கேட்டார்.
- மறு நாள் கலீபா தாயையும் மகளையும் தனது அலுவலகத்திற்கு அழைத்து நடந்த விடயங்களை விசாரித்தார்.
- மகளின் நற்பண்புகளைப் பாராட்டியதுடன் அவளுக்கு சன்மானமாக தனது மகனைத் திருமணம் முடித்துக் கொடுத்தார்

# பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1. கலீபா உமர்(றழி), தலைமை தொடர்பாக கொண்டிருந்த கருத்து யாது?
   **மக்கள் பணி செய்பவன்தான் மக்கள் தலைவன்**

2. தாய், பாலிலே தண்ணீர் கலக்க முடிவெடுத்தமைக்கான காரணங்களைத் தருக.
   **கறந்த பால் போதாமை**
   **கூடுதலாகப் பாலை விற்றால் அதிக பணம் கிடைக்கும்**

3. உண்மை பேசியதற்கு மகளுக்கு சன்மானமாகக் கிடைத்தது யாது?
   **கலீபாவின் மகனைத் திருமணம் முடிக்கக் கிடைத்தது.**

4. மகளின் குணப்பண்புகள் இரண்டு தருக.
   **இறைவன் மீது பக்தி கொண்டவள்**
   **தவறு செய்யக்கூடாது என நினைப்பவள்**

5. கலீபா உமர்(றழி) சிறந்த தலைவர் என்பதற்கான ஆதாரங்கள் யாவை?
   **நேர்மையான ஆட்சி செய்பவர்**
   **மக்கள் குறைகளை அறிந்து செயற்படுபவர்**

# பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. கலீபா நேர்மையாக ஆட்சி செய்தார். – நேர்மையான ஆட்சியைக் குறிப்பது
1) செங்கோலாட்சி 2) கொடுங்கோலாட்சி
3) அநீதியான ஆட்சி 4) பொருத்தமற்ற ஆட்சி

2. மக்கள் சந்தோஷமாக வாழ வேண்டும். சந்தோஷம் எனும் கருத்தைத் தராத சொல்
1) மகிழ்ச்சி 2) ஆனந்தம் 3) களிப்பு 4) வெறுப்பு

3. பாலில் தண்ணீரைக் கலப்பது குற்றமல்லவா? – குற்றம் என்பதன் எதிர்ப்பதம்
1) குணம் 2) சுற்றம் 3) குத்தம் 4) குறை

4. "என்ன நடந்தது?" என கலீபா விசாரித்தார். இங்கு இடம்பெற்ற நிறுத்தற்க் குறிகள்.
1) வினாக்குறி, வியப்புக்குறி 2) முற்றுப்புள்ளி, காற்புள்ளி
3) மேற்கோட்குறி, வினாக்குறி 4) காற்புள்ளி, அரைப்புள்ளி

5. நாணத்தால் அவள் தலை குனிந்தாள். நாணம் என்பதன் கருத்து
1) அறிவு 2) கோபம் 3) மயக்கம் 4) வெட்கம்

# <u>ஆக்கப்பெயர்</u>

பெயர் அல்லது வினையுடன் விகுதி சேர்ந்து உருவாக்கப்படும் பெயர்ச் சொல் <u>ஆக்கப்பெயர்</u> எனப்படும்.

பெயர் + விகுதி
வினை + விகுதி
} **ஆக்கப்பெயர்**

**விருந்து +ஆளி = விருந்தாளி**

**முயல் +சி = முயற்சி**

# <u>கூட்டுப்பெயர்</u>

பெயர்ச் சொல்லுடன் பிறிதொரு பெயர்ச் சொல்லை இணைத்து அல்லது வினைச் சொல்லுடன் பெயர்ச் சொல்லை இணைத்து உருவாக்கப்படும் பெயர்ச்சொல் <u>கூட்டுப்பெயர்</u> எனப்படும்.

பெயர் + பெயர்
வினை + பெயர் } **கூட்டுப்பெயர்**

**புகை + வண்டி = புகைவண்டி**

**கட்டு + உரை = கட்டுரை**

# ஆக்கப்பெயர், கூட்டுப்பெயர் என்பவற்றை வேறுபடுத்துக.

முயற்சி, தொழிலாளி, சுடுநீர், மருத்துவம், நீர்வீழ்ச்சி, போர்வை, கடலலை, எழுதுகருவி, இரசாயனவியல், முயற்சியாளன், வானவில், புத்தகப்பை

| ஆக்கப்பெயர் | கூட்டுப்பெயர் |
|---|---|
| 01. முயற்சி | 01. சுடுநீர் |
| 02. தொழிலாளி | 02. நீர்வீழ்ச்சி |
| 03. மருத்துவம் | 03. கடலலை |
| 04. போர்வை | 04. எழுதுகருவி |
| 05. இரசாயனவியல் | 05. வானவில் |
| 06. முயற்சியாளன் | 06. புத்தகப்பை |

# பந்தி

யாதேனும் ஒரு விடயத்தை விளக்கியும், விரித்தும், ஒழுங்குமறையில் எழுதும் அமைப்பே பந்தியாகும்.

ஒரு விடயத்தை விபரிப்பதாக அமையும் பல வாக்கியங்கள் ஒழுங்கு முறையில் சேர்ந்து பந்தி உருவாகின்றது.

# ஒழுங்கற்றுக் காணப்படும் வாக்கியங்களைப் பொருள்தரக்கூடிய பந்தியாக ஒழுங்குபடுத்துக.

செயற்பாடு 01

1. இன்பம் வரும்போது மகிழ்கிறோம்.
2. அந்த இரண்டும் எல்லோரது வாழ்க்கையிலும் வந்து போகின்றன.
3. ஆனால் துன்பம் வரும்போது துவண்டு விடுகிறோம்.
4. இன்பமும் துன்பமும் கலந்ததே உலகம்
5. அவ்வாறன்றி இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக ஏற்றால் எமது வாழ்க்கை அமைதி நிறைந்ததாய் அமையும்.

பந்தியாக்கும்போது வாக்கியங்கள் வரவேண்டிய ஒழுங்கில் இலக்கங்களை எழுதுக. ..........................42135..........................

## செயற்பாடு 02

1. அவ்வகையில் தமிழில் தோன்றிய முதலாவது காப்பியம் சிலப்பதிகாரமாகும்.
2. காவியம் என்பது ஒரு பேரிலக்கிய வடிவமாகும்.
3. அது இளங்கோவடிகளாற் பாடப்பட்டது.
4. அது ஒரு கவிதையினை, தொடர்ச்சியாக அமையும் செய்யுள்களால் எடுத்துரைப்பது
5. அவரைப்போலவே சாத்தனார் மணிமேகலை என்ற காவியத்தைப் படைத்தார்.

பந்தியாக்கும்போது வாக்கியங்கள் வரவேண்டிய ஒழுங்கில் இலக்கங்களை எழுதுக. ............ 24135 ............

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துள்ள பந்திகளை உருவாக்குங்கள்**

- கல்வித் துறையில் கணினியின் பயன்பாடு
- தொடர்பாடல் துறையில் கணினியின் பயன்பாடு
- பொறியியற் துறையில் கணினியின் பயன்பாடு
- ஆராய்ச்சித் துறையில் கணினியின் பயன்பாடு
- மருத்துவத் துறையில் கணினியின் பயன்பாடு

# நன்றி